செ.வெ.எண்:-06/2020 நாள்:04.05.2020

திண்டுக்கல் மாவட்டம்

# வணிக நிறுவனங்கள் செயல்பட அனுமதியளித்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தொழில் வர்த்தக சங்கம், மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது.

---

திண்டுக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் இன்று (04.05.2020) வணிக நிறுவனங்கள் செயல்பட அனுமதியளித்தல் தொடர்பாக மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி,இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் தொழில் வர்த்தக சங்கம், மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்ததாவது:-

கொரோனோ வைரஸ் நோய்த் தடுப்பு நடவடிக்கைகள் தொடர்பாக தமிழ்நாட்டில் ஊரடங்கு உத்தரவு 4.5.2020 முதல் 17.5.2020 நள்ளிரவு 12.00 மணி வரை நீட்டிப்பு செய்தும், நோய் கட்டுப்பாட்டு பகுதிகள் நீங்கலாக ஏனைய பகுதிகளில் மேற்கொள்ளப் பட வேண்டிய நடவடிக்கைகள் குறித்து அரசாணை (எண் 217), வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை சார்பில் தெரிவிக்கப்பட்ட வழிகாட்டுதல்களின்படி திண்டுக்கல் மாவட்டத்தில் தொழில் வர்த்தக சங்கம், மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களுடன் கலந்தாய்வு மேற்கொள்ளப்பட்டது.

கூட்டத்தில் திண்டுக்கல் மாவட்டத்தில் தொழில் நிறுவனங்கள் திறக்க அனுமதி வழங்குவது தொடர்பாக தொழில் வர்த்தக சங்கம், மாவட்ட வர்த்தக சங்கப் பிரதிநிதிகள் ஆகியோர்களிடம் கருத்துரு கோரப்பட்டு அவர்களது முழு ஒப்புதலுடன் பின்வரும் முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது.

திண்டுக்கல் மாவட்டத்தில் கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகள் (Containment Zone) அமைந்துள்ள பகுதிகளில் ஏற்கனவே உள்ள நடைமுறைகளின்படி எந்த ஒரு நிறுவனமோ, தொழிற்சாலையோ, கடைகளோ செயல்பட அனுமதி கிடையாது.

திண்டுக்கல் மாவட்டத்தில் அத்தியாவசியப் பொருட்கள் விற்பனை செய்ய அனுமதிக்கப்பட்டுள்ள கடைகள் வழக்கம்போல் காலை 6.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை போதிய சமூக இடைவெளியைப் பின்பற்றி செயல்படலாம்.

திண்டுக்கல் மாவட்டத்தில் மாநகராட்சி, நகராட்சி, ஊராட்சி மற்றும் பேரூராட்சி ஆகிய பகுதிகளில் கட்டுமானப் பணிகள், சாலை அமைக்கும் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளலாம். அதே நேரத்தில் அப்பணியில் ஈடுபடும் பணியாளர்கள் வேலை செய்யும் இடத்தில் தங்கி பணிபுரிவதுடன் பணி நேரத்தில் போதுமான **சமூக இடைவெளியுடனும், முகக் கவசம் அணிந்து பணி புரிய வேண்டும்.** (வெளியில் இருந்து வருவதற்கு ஒரு முறை மட்டும் அனுமதிக்கப்படுவர்).

கட்டுமானப் பணிகளுடன் தொடர்புடைய ஹார்டுவேர், சிமிண்ட், இரும்பு, எலக்ட்ரிக்கல், பிவிசி பைப், பெயிண்ட் மற்றும் மரக்கடைகள் போன்றவை காலை 9.00 மணி முதல் பி.ப. 2.00 மணி வரை செயல்பட அனுமதி வழங்கப்படுகிறது. மேற்படி கடைகளில் பணிபுரியும் பணியாளர்கள் முகக்கவசம் அணிவதுடன் வாடிக்கையாளர்களால் போதிய சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படுவதை சம்பந்தப்பட்ட நிறுவனங்களின் உரிமையாளர்கள் உறுதி செய்து கொள்ள வேண்டும்.

அடுகுக் கடைகள், இருசக்கர மற்றும் நான்கு சக்கர வாகன பணிமனைகள் (Workshops), எழுதுபொருள் விற்பனைக் கடைகள் (Stationeries Shop), ஜெராக்ஸ் கடைகள், மிக்சி, குக்கர் பழுது நீக்கம் செய்யும் கடைகள் மற்றும் விவசாயம் சார்ந்த மின் மோட்டார் விற்பனை மற்றும் பழுது நீக்கம் செய்யும் கடைகள், செல்போன் பழுது நீக்கும் கடைகள் ஆகியவைகள் செயல்படலாம்.

மாவட்ட ஆட்சியரின் முன்அனுமதி பெற்று வீடியோ மற்றும் புகைப்பட கலைஞர்கள், எலக்ட்ரிக்கல், பிளம்பர், ஏ.சி மெக்கானிக், தச்சர் ஆகிய சுயதிறன் பணியாளர்கள் பணிபுரியலாம்.

சிறு, குறு தொழிலில் ஈடுபட்டுள்ள நிறுவனங்கள் 50 சதவீத பணியாளர்களுடன் முகக்கவசம், கிருமி நாசினி ஆகியவற்றை பயன்படுத்தி பணிபுரிய அனுமதிக்கலாம். மேலும் மேற்படி இடங்களில் பணிபுரியும் பணியாளர்கள் அனைவரின் உடல் வெப்பநிலை Thermal Scanner மூலம் பரிசோதனை செய்யப்படுவதுடன் போதிய சமூக இடைவெளியுடன் பணிபுரிய வேண்டும். எக்காரணம் கொண்டும் கட்டுப்பாட்டு பகுதிகளாக அறிவிக்கப்பட்ட பகுதிகளில் இருந்தோ, 55 வயதுக்கு மேற்பட்டவரோ அல்லது டயாலிசிஸ், இதய நோய் போன்ற எளிதில் நோய்த்தொற்றுக்கு ஆளாகக் கூடிய நபர்களை பணிபுரிய அனுமதிக்கக் கூடாது. தொழிலாளர்கள் பயன்படுத்தும் கழிவறைகள் ஒரு மணி நேரத்துக்கு ஒரு முறை சுத்தம் செய்யப்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சியரின் உரிய முன் அனுமதி பெற்று பணியாளர்களை ஏற்றி வரும் வாகனங்கள் இயக்கப்படுவதுடன், வாகனங்களை ஒவ்வொரு நடை முடிந்தவுடன் கிருமி நாசினி தெளிக்கப்பட வேண்டும்.

அனைத்துப் பகுதிகளிலும் உள்ள கிட்டங்கிகளில் இருந்து பொருட்களை ஏற்றி இறக்குவதற்கு மாலை 7.00 மணி முதல் இரவு 9.00 மணி வரை கால அவகாசம் வழங்கப்படுகிறது.

அத்தியாவசியப் பணிகள் நீங்கலாக மேலே சொல்லப்பட்ட தொழில் தொடர்பான நிறுவனங்களில் 6.5.2020 முதல் மேலே தெரிவிக்கப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு செயல்பட வேண்டும். தவறும் பட்சத்தில் சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மூடி சீல் வைக்கப்படும்.

திண்டுக்கல் மாவட்டத்தில் செயல்பட்டு வரும் நூற்பாலைகள், ஜவுளி ஆலைகள் மற்றும் அனைத்து வகையான தொழிற்சாலைகளை திறப்பது தொடர்பாக சம்பந்தப்பட்ட நிறுவனங்களால் **https://www.tnepass.tnega.org** என்ற இணையதளத்தில் ஆன்லைன் மூலம் மனுச் செய்யப்படும் பட்சத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களால் ஆய்வு செய்யப்பட்டு தொழிற்சாலைகள் திறக்க அனுமதி வழங்குவது தொடர்பாக உரிய ஆணைகள் பிறப்பிக்கப்படும்.

எனவே திண்டுக்கல் மாவட்டத்தில் கொரோனா வைரஸ் தொற்று நோய் பரவா வண்ணம் வணிகர்கள் அனைவரும் பொதுமக்களால் போதுமான சமூக இடைவெளி கடைப்பிடிக்கப்படுவதை உறுதி செய்து மாவட்ட நிர்வாகத்தால் எடுக்கப்படும் முடிவுகளுக்கு முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி மு.விஜயலட்சுமி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்.

ஆலோசனைக் கூட்டத்தில் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திரு.ஆர்.சக்திவேல், மாவட்ட வருவாய் அலுவலர் திரு.ஆர்.கோவிந்தராசு, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர்(பொது) திரு.ஆர்.ராஜ்குமார், திண்டுக்கல் மாநகராட்சி ஆணையாளர் திரு.செந்தில் முருகன் உட்பட வணிகர் நிறுவன சங்க நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், திண்டுக்கல்.**